செய்தி வெளியீடு எண்:964 நாள்:28.10.2021

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 08.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2021–22 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள்.

"தஞ்சாவூர் மாவட்டம், கண்ணந்தங்குடி, மேலையூர் அரசு ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளியில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவரும், வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மற்றும் பென்னாத்தூர் அரசு ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளில் சுற்றுச் சுவர்களும் ரூ.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்."

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியின் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.28.56 இலட்சத்திற்கும், தஞ்சாவூர் மாவட்டம், கண்ணந்தங்குடி மேலையூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு இரண்டு புதிய வகுப்பறை கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.50.93 இலட்சத்திற்கும் மற்றும் வேலூர் மாவட்டம் பென்னாத்தூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.12.85 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி அளித்தும் நிதி ஒதுக்கீடு செய்தும் முறையே **அரசாணை (நிலை) எண்:63, ஆ.தி.(ம)ப.ந. (ஆதிந2(1)) துறை, நாள் : 08.09.2021, அரசாணை (நிலை) எண்:64, ஆ.தி.(ம)ப.ந. (ஆதிந2(1)) துறை, நாள்: 08.09.2021 மற்றும் அரசாணை (நிலை) எண்:67, ஆ.தி.(ம)ப.ந. (ஆதிந2(1)) துறை, நாள் : 22.09.2021** – களில் ஆணைகள் **வெளியிடப்பட்டுள்ளன.**

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9